BDJ-4-TA

# இயேசுவை வீழ்த்துவதற்கான போராட்டம் – நிகழ்ச்சி 4

**அறிவிப்பாளர்**: இன்றைக்கு ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில், கிறிஸ்தவத்தின் சில விமர்சகர்கள் சரித்திர நாயகன் இயேசு தம்மை தேவ குமாரன் என்றோ மேசியா என்றோ தெய்வீகமானவர் என்றோ கூறவில்லை என்கின்றனர். ஆனால் இது உண்மையா. ஆதிகால வரலாற்று ஆதாரங்கள் நமக்கு என்ன சொல்லுகிறது? இன்றைக்கு நமது ஜான் அன்கேர்பெர்க் சிறப்பு நிகழ்ச்சியில் அதை பற்றி பார்க்க இருக்கிறோம்.

***

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நாம் சரித்திர இயேசுவை பற்றியும் அந்த கருத்திற்கு மாறாக எழும்பும் ஊடகங்களின் கருத்துக்களையும் பார்த்து வருகிறோம் – நாவல்கள், புத்தகங்கள், டிவி நிகழ்சிகள் – அவை அனைத்தும் பாரம்பரிய இயேசு, கிறிஸ்தவத்தின் இயேசுவை, மாற்ற மறுபரிசீலனை செய்யவேண்டும் என்கிறது. நம்மோடு இன்றைக்கு உலகின் பிரசித்திபெற்ற முன்னணி மேதைகள் இருக்கின்றனர். Dr. டேரல் பாக், புதிய ஏற்பாடு ஆராய்ச்சி பேராசிரியர் டல்லாஸ் இறையியல் கழகம், மற்றும் Dr. டேனியேல் B. வால்லேஸ், புதிய ஏற்பாடு ஆய்வு பேராசிரியர் டல்லாஸ்.

இப்ப, நாம என்ன பார்க்க போறோம்னா, அந்த ஆவணங்களில், அந்த ஆதாரங்கள்ல, டேன், நீங்க பல்கலைகழகங்களுக்கு போனாலும் இப்போது இதை கேட்டுகொண்டிருக்கிற மாணவர்களும் உங்ககிட்ட கேட்டா, “நா இயேசுவ பத்தி தெரிஞ்சுக்கனுன்னு சொன்னா,” நமக்கு இருக்கிற அதே ஆவணங்களில், அந்த வரலாற்று ஆதாரங்களில், எங்கிருந்து இயேசு யார் என்பதை தெரிந்துகொள்ள ஆரம்பிக்கலான்ற யோசனையை அவங்களுக்கு நீங்க சொல்வீங்க?

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** அவங்கள னா மாற்கு சுவிசேஷத்தில் இருந்து ஆரம்பிக்க சொல்லுவேன். நிச்சயமா அவங்க சுவிசேஷங்களில் இருந்து தான் ஆரம்பிக்கவேண்டும், ஆனா அவங்க மாற்கு ல இருந்து ஆரம்பிச்சாங்கன்னா இறையியலின் இரண்டு பக்கங்களையும் சொல்லுகிற ஆவணங்களை அவர்களால் பார்க்க முடியும் அதினால் இது அடிப்படை காரியங்களை கொண்டதென்று புரிந்துகொல்வாங்க. அது மட்டுமல்ல இங்க, இதுல மற்ற சுவிசேஷங்கலான மத்தேயு லூக்கா யோவானில் சொள்ளப்பட்டவைகளின் இறையியல் சம்பந்தமானவற்றை பார்க்கலாம், நீங்க மாற்கு மட்டும் பிடிச்சுகிட்டா நமக்கு தேவையான அந்த மைய பொருளை நாம் பெற்றுக்கொள்ள முடியும். முக்கியமான விஷயம் என்னன்னா இங்க கூட இயேசு தேவன் என்பதை பார்க்க முடியும். எனக்கு ரொம்ப பிடித்த பகுதி எதுன்னு கேட்டீங்கன்னா, மூன்று பகுதிகள் இருக்கும் முடிஞ்சா எல்லாத்தையும் சேர்த்து சொல்ல விரும்புறேன்.

மாற்கு 2:5 – இயேசு பேதுருவின் வீட்டில் இருக்கிறார் அங்க கூரையை பெயர்ந்தேடுக்கிரார்கள், டைல்ஸ் இல்ல கூரைதான் அதை பிரித்து நான்கு பேர் திர்மிர்வாத காரனை இறக்கறாங்க ஏன்னா கதவு வழியா நுழைய வழியில்லை, அந்த இடம் நிரம்பியிருந்தது. அவங்க அந்த நபரை படுக்கையோடு மெதுவா – இறக்கினாங்க- இயேசு அவனை பார்த்து சொல்லுகிறார், “மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது.” அப்ப அங்கிருந்தவங்க, என்ன! இந்த ஆள், தன்னோட பாவங்கள் மன்னிக்கப்ப்டும்படி இங்க வரலையே, அவ நடக்கனுன்றதுக்காக தான இங்க வந்தான்! அந்த இடத்துல மத தலைவர்களும் உட்கார்ந்திருந்தாங்க. அவங்க ஒருத்தருகொருத்தர் முறுமுறுக்க ஆரம்பிச்சாங்க, தேவ தூஷணம் சொல்லுகிறான். தேவன் மட்டும்தான் பாவங்களை மன்னிக்க முடியும்.” (மாற்கு 2:6-7) அவங்க சொன்னதுல பாதி உண்மைதான் – அதாவது, தேவன் மட்டும்தான் பாவங்களை மன்னிக்க முடியும். ஆனா மத்த பாதி உண்மை இல்லை. அவங்க தங்களுக்குள் முறுமுறுத்ததை அறிந்த இயேசு அவங்களுக்கு பதில் சொல்லுகிறார். அவர் சொன்னார், “மனுஷகுமாரனுக்கு பூமியிலே பாவங்களை மன்னிக்க அதிகாரம் உண்டென்பதை காண்பிக்கும்படி என்றார்... அவனை எழுந்து நடக்கும்படி கட்டளையிட்டார். (மாற்கு 2:100-11)

இப்ப, இங்க என்ன பார்க்கிறோனா, தேவன் மட்டுமே செய்ய கூடிய காரியங்களை இயேசு செய்கிறார், அதுல பாவங்களை மன்னிப்பது ஒன்று. அதனால இதை செய்ய மனுஷகுமாரனுக்கு அதிகாரம் இருக்குன்னு அவர் சொல்லும்போது, தேவனை பற்றி மட்டுமே சொல்லகூடிய ஒரு தன்மையை தம்மோடு ஒப்பிட்டு கூறுகிறார். இப்ப, அந்த மத தலைவர்கள் அதை புரிஞ்சுக்கிட்டாங்க, ஆனா சீஷர்கள் அதை புரிந்துசுக்கள. இயேசு என்ன சொல்லுகிறார் என்பதை மத தலைவர்கள் புரிந்துகொள்ள காரணம் என்னவென்று கேட்டால் அவங்க அவருக்கு உண்மையானவர்களாக இருக்கவேயில்லை. அவங்க யூத கலாச்சாரத்திற்கு உண்மையா இருந்தாங்க, அவங்க தினமும் ஷேம்மா வாசிக்கிறவர்களாக இருந்தாங்க. அதில் , “இஸ்ரவேலே, கேள், கர்த்தராகிய ஆண்டவர் ஒருவரே, கர்த்தரும் ஒருவரே.” (உபாகமம் 6: 4) சரி, இயேசு பாவங்களை மன்னிக்கும்போது தேவனுடைய ஸ்தானத்தில் நின்று செயல்படுவதை கூருகிறவராக இருக்கிறார்.

இப்ப, சீஷர்கள், இன்னொரு பக்கத்தில், இறையியல் ரீதியில் தேர்ச்சி பெறாதவர்கள், ஆனால் இயேசுவுக்கு அவங்க உண்மையா இருந்தாங்க யூதர்களுக்கும் உண்மையா இருந்தாங்க, இப்ப இயேசு யார் என்ற மிகப்பெரிய கேள்விக்குறி அவர்களுக்கு முன்பாக இருக்கிறது. அவர் நல்லவர் என்று அவங்களுக்கு தெரியும், அவர் ஒரு தீர்க்கதரிசின்னு தெரியும், ஜனங்களை அவரால் குணபடுத்த முடியுன்னு தெரியும் – எல்லாத்தையும் அவங்க பார்த்தாங்க. அவரால பிசாசுகளை துரத்த முடியுன்னு அவங்களுக்கு தெரியும். ஆனா அவர் எப்படிபட்டவர் என்று அவங்களால புரிஞ்சுக்க முடியல.

அடுத்த இரண்டு அதிகாரத்திற்கு பிறகு மாற்கு நாலு, இங்க இயேசு காற்றை அதட்டுகிறார். அதை இரண்டு வார்த்தைகளில் அவர் செய்கிறார்: இரையாதே! அமைதலாயிரு! (மாற்கு 4:39) அவ்வளவுதான்! வேறு எதையும் சொல்லல, “தேவனுடைய நாமத்தில் கட்டளையிடுகிறேன்னு  என்றோ வேறு ஏதாவதோ சொல்லல. அவர் மென்மையாக காற்றை அமைத்தி படுத்தினார். உடனே அதுவும் அமைதலாயிற்று.

நாற்பத்தி ஒன்றாம் வசனத்தில் சீஷர்கள் சொல்றாங்க, “இவர் எப்படிப்பட்டவரோ காற்று இவருக்கு கீழ்ப்படிகிறதே? அதனால அவர் எந்த மாதிரியானவர் என்று அவர்களால் வகையறுக்க முடியல. அவருக்கு உண்மையாக இருந்தாங்க, ஆனா யாருக்கு உண்மையாக இருக்கிறோம் என்பதை அவர்கள் அறியாமல் இருந்தாங்க.

அதற்கு அப்பறம் மாற்கு எட்டாம் அதிகாரம் இங்க குருடனான மனிதனை குணமாக்குவதை பார்க்கிறோம், இயேசு தமது உமிழ்நீரினால் குணமாக்குகிறார். (மாற்கு 8:22)இது உண்மையில் மறுக்க முடியாத சம்பவம் இதை பற்றி பிறகு பார்க்கலாம் என நினைக்கிறேன். ஆனா அதற்கு பிறகு இயேசு தான் மேசியா என்று பேதுருவால் அறிக்கை செய்யப்பட்ட பிறகு (மாற்கு 8:29), சீஷர்களுக்கு ஏன் இயேசு மேசியாவாக இருக்கிறார் எதற்கு சிலுவை மரிக்கணும் எதற்கு உயிரோடு எழும்ப வேண்டும் என்பது புரியாமல் இருக்கிறது. அதற்காக விளக்கம் அவர்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை. அதற்கு பிறகு மாற்கு 9:9 வருகிறது இங்க, மறுரூப அனுபவத்திற்கு பிறகு, இயேசு தமது மூன்று சீஷர்களோடு இருக்கிறார் அவங்க மலையை விட்டு இறங்கி வருகிறார்கள். அப்ப அவர்களிடம் சொல்கிறார், “மனுஷகுமாரம் உயிர்த்தெழும் வரை இதை ஒருவருக்கும் அறிவிக்க வேண்டாம் என்று கூறுகிறார். அடுத்த வசனத்தில் அவர் சொல்லுகிறார், மாற்கு 9:10. “மரித்தோரிலிருந்து எழுந்திருப்பது என்னவென்று அவர்கள் ஒருவரிடத்தில் ஒருவர் விசாரித்தனர்.”

இதெல்லாம் எதை குறிக்கிறது என்றால், வரலாற்று சார்ந்த ஆவணங்களாக இருக்கிறது. மனுஷ வரலாற்றில் இயேசு உயிரோடு எழும்புவதை என்று சொல்வதை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை, அவங்களுக்கு தெரிந்ததெல்லாம் கடைசி நாளில் மரணத்திலிருந்து எழும்புவது தான், அதைதான் யூதகுலம் போதிக்கிறது. இது மறுக்க முடியாத ஒன்றாகும். இந்த மாதிரியான காரியங்கள் எப்படிப்பட்டதென்று புரியவில்லை. இதிலிருந்து சிலுவை மரணத்திற்கு பிறகு இவர்கள் உண்டாக்கிய புதிய உபதேசம் என்று சொல்வது சரியல்ல என்பது தெரிகிறது. இதை அவர்களாக உருவாக்கி சொன்ன ஒன்றல்ல. இது இயேசு அவர்களுக்கு கற்ப்பித்த ஒன்றாக இருக்கிறது ஏன்னா அது அவர்களுக்கு புரியாமல் இருந்தது. அவர் மரணத்தில் இருந்து உயிர்த்தெழுந்த பிறகுதான் அவர்கள், “ஓ, உண்மையா சரீரபிரகாரமான உயிர்த்தெழுதலை குறித்து சொன்னார் என்று அறிந்துகொண்டனர்.”

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அவர் சொன்னது நடந்து என்று எப்போது அந்த விளக்கின் வெளிச்சம் அவர்களுக்கு உதித்தது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** உயிர்த்தெழுதலுக்கு பிறகு, ஏன்னா உயிர்த்தெழுதல் மூலம்தான், இவர் முற்றிலும் வித்தியாசமான நபர் என்பதை சீஷர்கள் புரிந்துகொண்டனர். அவர் தீர்க்கதரிசிகளில் ஒருவர் போல இல்லை. அவரை மரணத்திலிருந்து எழுப்ப எந்தவித மனுஷீக வல்லமையும் செயல்படவில்லை. இது மட்டுமில்ல, அப்போஸ்தலனாகிய பவுலை குறித்து சொல்லணும், ஏன்னா தமஸ்கு போற வழியில அவ மனமாறினதினால், இப்ப இரண்டு வித்தியாசாமான முரண்பாடுகளை முன்வைக்கிறார், ஒன்று, தேவன் இந்த மனிதனை சபித்தார் என்று தெரியும் என்கிறார்.

அது எப்படி அவருக்கு தெரியும்? ஏன்னா உபாகமம் 21:23 கூறுகிறது, “மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன்.” அதனால பவுல் வேதம் போதித்த காரியத்தில் உறுதியாக இருந்திருக்கிறார். அதனாலதான் உறுதியாக கிறிஸ்தவர்களுக்கு எதிராக செயல்படுகிறார். ஏன்னா தேவன் இந்த மனிதனை மரத்திலே தூக்கி போட்டதால் சபித்திருக்கிறார் அப்படியிருக்கும் பொது, எப்படி கிறிஸ்தவர்கள் தேவன் இவரை மரித்தோரிலிருந்து எழுப்பி ஆசீர்வத்தார் என்று சொல்லமுடியும்?

பவுலை சமாதானப்படுத்திய ஒரே விஷயம் எது பவுலை சமாதானப்படுத்தியது. இங்க அவர் தமஸ்குவுக்கு போகிற வழியில் இருக்கிறார் அங்க இந்த வெளிபாடு உண்டாகிறது. வானத்திலிருக்கும் கிறிஸ்துவை காண்கிறார், அவர் கேட்கிறார். “தேவனே நீர் யார்? “நீ துன்பப்படுத்துகிற தேவன் நானே.” (அப்போஸ்தலர் 9:4-5)இப்ப அவர் கண்டறிய வேண்டிய இரண்டு உண்மைகள் முன்பாக இருக்கிறது. ஒன்று தேவன் அவரை சபித்திருக்க வேண்டும், அதைதான் வேதம் போதிக்கிறது. இன்னொன்ட்ர், தேவன் அவரை ஆசீர்வதித்திருக்க வேண்டும், அதைதான் இந்த மறுக்க முடியாத அனுபவம் உண்டாக்கியிருக்கும் என நம்புகிறேன். அதை கண்டறியும்படியாக அரேபியா சென்றார், அங்கு மூன்று ஆண்டுகள் இருந்து இதை கண்டறிகிறார். இதை வைத்து பவுல் என்ன செய்கிறார் என்று பார்த்தால் ஒன்றை அவர் புரிந்து கொண்டார், இயேசு தமது சொந்த பாவங்களுக்காக மரிக்கவில்லை, அதனால அவர் பாவமில்லாதவராக இருந்திருக்கணும். அப்படிபார்த்தா, அவர் பாவியில்லைனா, அவரை எந்த தரத்தில் வைத்து பார்ப்பது? அவர் சாதாரண மனிதனா? அது சரியா வராது. அதனால அதற்கு கொஞ்சம் நேரமெடுத்தது, கொஞ்சம் நேரமானது, அதை பத்தி அப்பறமா பார்க்கலாம், ஆனா ஏதோவொரு கட்டத்துல ஒன்றை புரிந்துகொண்டார் அதாவது இயேசு கிறிஸ்து நமது பாவங்களுகாக நமக்கு பதிலாக மரித்தார், எனவே, அவர் தமது தனித்துவத்தை பதித்திருக்கிறார், அது தனித்துவமான தெய்வீக நிலை.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** டேரல், நீங்க ஆரம்பத்திலிருந்து கிறிஸ்தவராக இல்ல, உண்மையில், நீங்க யூத பாரம்பரியத்தை சேர்ந்தவர், நீங்க கல்லூரியில் இருந்தபோது, நீங்க எதையுமே நம்பாம இருந்தீங்க. இயேசுவை பிடித்துகொள்ளும்படி என்ன நடந்தது? உங்களை ஈர்த்த காரியங்கள் என்ன?

**Dr. டேரல் பாக்:** நா என்ன நினைக்கிறேன்னா இங்க நடக்கிற முதல் விஷயம் புதிய ஏற்பாட்டை வசிக்கும்போது எல்லாம் தெளிவாகிறது. ஒருத்தர் எங்கிட்ட புதிய ஏற்பாடை கொடுத்து வாசிக்க சொன்னார், “இயேசுவை பத்தின கலாசார கண்ணோட்டம் கிடைக்கும். அந்த கண்ணோட்டத்தின் படி இயேசு சிறந்த போதகராக இருக்கிறார். அவர் தீர்க்க தீர்க்கதரிசியாகவும் பார்க்கப்பட்டார். கிரேட். ஆனா இதை வாசித்து உங்களுக்கு நீங்களே கேட்டுக்கோங்க, இயேசுவின் போதனைகள் சர்ச்சைக்குரியதா அல்லது இயேசுவே சர்ச்சைக்குரியவரா? அதை சரியாக புரிந்து கொள்ளுகிற அளவுக்கு நீங்க புத்திசாலின்னு நினைக்கிறோம். அவங்க எங்கிட்ட ஒரு வேதாகமத்தை கொடுத்தாங்க, அதை நான் வாசிக்க ஆரம்பித்தேன்.

சுவிசேஷங்களை வாசிக்க துவங்கினபோது எனக்கு புரிந்தது இயேசுவின் போதனைகள் சர்சைகுரியதாயில்ல, அவர்தான் சர்ச்சைக்குரியவராக இருந்திருக்கிறார். ஆதாவது ஒரு நபராக, அவர் தம்மை குறித்து சொன்ன காரியங்கள். அவர் தான் மேசியாவாக இருந்திருக்கிறார். அவர் குறைந்த பட்சம் மேசியாதான. அவர் தான் மனுஷகுமாரன், உயர்ந்த இவர் அநாதி தேவனிடத்தில் இருந்து அதிகாரத்தை பெற்றிருக்கிறார். எனக்கு அது எப்படி தோன்றியது என்றால், இது நீங்க கேட்ட இரண்டாவது கேள்விக்கான பதில் என்று நினைக்கிறேன் டேன், அதாவது ஆதி திருச்சபையினர் இயேசு தேவனால் தமது அதிகாரத்தையும் பிரசன்னத்தையும் பகிர்ந்துகொள்ளும்படி அழைக்கப்பட்டவர் என்பதை தெரிந்துகொண்ட பொது இதை ஏற்றுகொண்டாங்கன்னு நினைக்கிறேன். ஏன்னா யூதமார்கத்தில் தேவனுடைய மகிமையை ஒருவரும் பங்கிடுவது கிடையாது. அதனால நீங்க அந்த மகிமையையும் அந்த பிரசன்னத்தையும் பகிர்ந்துகொள்ளும் நபராக இருக்க வேண்டியது அவசியமானது. இந்த விஷயம் நிச்சயம் குறைச்சலை உண்டாக்கியிருக்கும், இப்ப நம்மால தேவனுக்கு அருகில் உட்கார முடியும், பிதாவின் வலது பாரிசத்தில் உட்காருகிறோமே? அந்த நபர் அவருடைய மகிமையையும் அவருடைய பிரசன்னத்தையும் பங்கிர்ந்து கொள்ளும் நபராக இருக்கணும், அப்படின்னா அவர் தெய்வீகதுவத்தோடு இருக்கவேண்டும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். இப்ப ஒரு இடைவேளை எடுத்துகொள்வோம். நாம திரும்ப வந்ததும், தி பேஷன் ஆப் கிரைஸ்ட் டின்போது, டையேன் சாயர் உங்கள ABC ல அந்த படத்தின் காரியங்களை பற்றி எடுத்து கூறும் வரலாற்று சாட்சிகளில் ஒருவராக உங்களையும் நிறுத்தியிருந்தார். அதுமட்டுமில்ல மத்தேயு மாற்கு லூக்கா எழுதிய காரியங்களை தொகுத்து நீங்க ஒரு பெரிய புத்தகம் எழுதியிருக்கீங்க, அதுதான் தி ட்ரையல் ஆப் ஜீசஸ். அதுல பதில் சொல்லியிருக்கீங்க, இயேசுவை கேள்வி கேட்டப்ப அவர் சொன்ன அதே பதில் போன்றது, “நீர் மேசியாவா, தேவனுடைய குமாரனா? சரியா? அதற்கான உங்கள் பதிலை கேட்க்க போகிறோம் ஏன் இதையே பிடித்துகொண்டிருக்கிறீர்கள் என்பதை இடைவேளைக்கு பிறகு பார்க்கலாம்.

****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வரவேற்கிறோம். இப்போது நாம் Dr. டேரல் பாக் மற்று Dr. டேனியேல் B வால்லேஸ் உடன் பேசிகொண்டிருக்கிறோம். அவர்கள் மாணவர்களுக்கு கூற விரும்புகிற ஆலோசனையை பற்றி பார்த்துகொண்டிருக்கிறோம் சரித்திர இயேசுவை ஆராய்ச்சி செய்ய பார்த்து ஆர் சொன்ன சில காரியங்களை பின்பற்ற விருப்பத்தோடு இருக்கிறவர்கள் குறிப்பாக அவர் தம்மை பற்றி சொன்னவைகளை கேட்க்கிறார்கள். அவர்கள் கண்டரியகூடிய இடம் எது? ஒரு விஷயத்தை உலக மக்கள் அனைவரும் அறிந்திருக்கிறார்கள் என்று சொன்னால் அது தி பேஷன் ஆப் கிரைஸ்ட் அதில் சொல்லப்பட்டிருக்கும் சில விஷயங்கள். யூத தலைவர்களின் கூடுகையில், இயேசுவின் சோதனையை பற்றி விவாதித்தனர். அந்த நேரத்தில் அவரிடம் சில கேள்விகளை கேட்டார்கள் அது திரும்ப திரும்ப மத்தேயு மாற்கு லூக்காவில் சொல்லப்பட்டவை. உண்மை என்னன்னா, அந்த பகுதியை இப்போது பார்க்கலாம், ஏன்னா அதைப்பற்றி நீங்க ஒரு புத்தகமே எழுதியிருக்கீங்க. நீங்க கண்ணார

கண்ட சாட்சிகளில் ஒருவர், வரலாற்று சாட்சி, டையேன் சாயரின் ABC நிகழ்ச்சியில் நீங்களும் இருந்திருக்கீங்க. அதை பற்றி எங்களுக்கு சொல்லுங்க.

**Dr. டேரல் பாக்:** சரி, னா இந்த கேள்விக்கு பொதுவான ஒரு தளத்தை நிறுத்தி காட்ட விரும்புகிறேன். இயேசு தம்மை யார் என்று சொன்னார்? இதை நமக்கு சொல்லுகிற மூன்று வேதபகுதிகள் இருக்கிறது, கடைசி பகுதிய போன வார நிகழ்ச்சியில் பார்த்தோம்.

முதலாவது, இயேசு தேவாலயத்திற்குள் போகிறார், வேத சுருளை ஏசாயா 61 ருக்கு திருப்புகிராறம், அதை வாசித்தார், அதில் ஆவியானவர் இறங்கிவருகிறதை பற்றியும் கேள்விகளுக்கான பதிலும் யூபிலி வருடமும் பிரகடனம் செய்வதை பற்றி சொல்கிறது, விடுதலை ஆண்டு பிரசித்தப்படுகிறது. இயேசு அங்கு உட்கார்ந்து சொல்லுகிறது என்னனா, "உங்கள் காதுகள் கேட்ட இந்த காரியங்கள் இன்று நிறைவேறிற்று,." (லூக்கா 4:21 இதிலிருந்து இயேசு விடுதலைக்காக வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவர் என்று தெரிகிறது, இறுதி காலம் என்று இறையியலாளர்கள் கூறுகிற காலத்திற்கு ஏற்றவர் இவர்தான் என்கின்றனர். அதை இரட்சிப்பிற்கான ஒரு நேரமாக நினைத்துகொள்ளுங்கள், தேவனுடைய வாக்குத்தத்தம் பன்னபப்ட்ட இரட்சிப்பு. அதுதான் முதல் பகுதியாக உள்ளது.

இரண்டாவது பகுதி யோவான் ஸ்நானகன் சிறைச்சாலை உட்கார்ந்து அவரிடம் கேட்கும் பகுதிதான், "னா சிறையில் உட்கார்ந்து என்ன செய்துட்டு இருக்கேன்? வரப்போகிறவருக்கு வழியை ஆயத்தம் பண்ணுகிறது நானாக இருந்தால் இது என்ன. தேவனுடைய இரட்சிப்பும் மீட்பும் விடுதலையும் வந்து விட்டது என்று நான் சொல்லுகிறவனாக இருந்தால், எப்படி நான் இந்த நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறேன்? இப்ப அவர் தனது சீஷர்களை இயேசுவிடம் அனுப்பி கேட்கிறார், "வருகிறவர் நீர்தானா வேறொருவர் வர காத்திருக்க வேண்டுமா? (லூக்கா 7:18)இப்ப, இயேசுவுடை பதிலை பார்க்கும்போது அவர் சரியான விதத்தில் கேள்வி கேட்கலன்னு தோணுது. நீங்க படுத்துள எல்லாம் பர்த்டிருப்பீங்கள்ள அந்தமாதிரி இருந்திருக்கனும், அதாவது, "வருகிறவர் நீர்தான இல்ல வேறொருவர் வர காத்திற்குக்கனுமா உண்மைய சொல்லுங்க? ஏன்னா அவர் சொன்ன அந்த பதில் ஏற்கனவே எங்கையோ யூதமார்க்கத்தில் கேள்வி பட்ட ஒன்றின் எதிரொலியாக இருக்கிறது. நீங்க 4Q521அ வாசித்தீங்கன்னா இது சவகடல் சுருள்களின் ஒரு பகுதியாக இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, நான்காவது பாகம்.

**Dr. டேரல் பாக்:** கும்ரானின் நான்காம் பாகம், 521. இதில் சொல்லப்பட்டிருக்கிறது, "வானங்களும் பூமியும் மேசியாவின் சொல்லுக்கு செவிகொடுக்கும், அவருடைய கற்பனைகளை விட்டு விலகாமல் இருக்கும். நித்திய ராஜ்ஜியம் நமக்கு உண்டாயிருக்கும். அவர் சிறைப்பட்டவர்களை விடுவிப்பார், குருடரின் கண்களை திறப்பார், நெருக்கப்படுகிறவர்களை தூக்கிவிடுவார்." என்று சொல்வதோடு சேர்த்து, "மரித்தோரை உயிரோடு எழுப்புவார், துயரப்பட்டவர்களுக்கு நற்செய்தியை கூறிடுவார் என்றிருக்கிறது." இப்ப, நீங்க லூக்கா ஏழில் இயேசுவின் பதிலை பாருங்க அது மத்தேயுவில் இருப்பது போலவே இருக்கிறது, இதே மாதிரியான பகுதியை இன்னும் சில

இடங்களிலும் பார்க்க முடியும். அதாவது, “நீங்கள் போய் கண்டவைகளையும் கேட்டவைகளையும் யோவானுக்கு தெரியப்படுத்துங்கள்.” (லூக்கா 7:22-23) அங்கு செவிடர் கேட்பதையும் குருடர் பார்வை அடைவதையும் சப்பாணிகள் நடப்பதையும் தரித்திரருக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதையும் பார்க்கிறோம், இது 4Q521 சொல்லப்பட்ட காரியங்களுக்கு ஒப்பாக இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இது ஏறக்குறைய சரியா இருக்கு. இது அங்க சொல்லப்பட்டது போல தான் இருக்கிறது.

**Dr. டேரல் பாக்:** ஆமா. இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் இயேசு தம்மை யார் என்று சொல்லலுகிற காரியங்களை, அதாவது இயேசு என்ன சொல்லுகிறார் என்பதை புரிந்துகொள்வதற்கு ஏற்றமாதிரி ஒரு பகுதி இங்க இருக்குது.

கடைசி பகுதியை தான் நீங்க நிகழ்ச்சியின் துவக்கத்துல சொன்னீங்க. அது எப்பன்னா இயேசு சனகரிப் சங்கத்திற்கு முன்பாக வந்து நிற்கும் பொது, யூத தலைவர்களுக்கு முன்னால நிற்கிறார், அங்க கேள்வி கேட்க்கிறாங்க, “நீர் கிறிஸ்துவா, ஜீவனுள்ள தேவனுடைய குமாரனா? (மாற்கு 14:61)நா நினைக்கிறேன் காய்பா என்ன கேட்க விரும்பியிருப்பாருன்னா, “நீர் உம்மை மேசியா என்று சொல்லுகிறீரா அல்லது உம்மை ராஜா என்று சொல்லுகிறீரா என்றிருப்பார்.”இதை அவர் கேட்க காரணம் என்னவென்று பார்த்தால் இவரை பிலாத்துவிடம் கூட்டிக்கொண்டு போகவும் சிலுவையில் அறியவும் ஒரு காரணம் வேணும். இப்ப, அதற்கு ஒரு எளிமையான வழி சீசர் உன்னை ஏற்ப்படுத்தாதபோது நீயே உன்னை ராஜா என்று சொல்லிக்கொண்டு இருந்தா அது போதுமே, சரியா? ரோமர்கள் பற்றி, பொதுவாக சொன்னா, எந்த விதமான ஆயத்த நிலைகளுக்கும் அவங்க ஒத்துக்க மாட்டாங்கள். அது ஒரு பின்னடைவாக இருந்துச்சு.

அதனால் இந்த கேள்விய கேட்கிறார், இயேசு அதற்கு இப்படி பதில் சொல்றார். அந்த பகுதியானது, மாற்கு பதினாலில் இருக்கிறது. சுவிசேஷங்களில் இது மிக முக்கியமான பகுதி, அது இப்படியாக சொல்கிறது. கேள்வி என்னவென்றால், “நீர் ஸ்தோத்தரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவா,” தேவனை தலையை சுற்றி தொடுகிற ஒரு கேள்வி. அதற்கான பதில் இதுதான், “நான் அவர்தான் என்றார் இயேசு, மனுஷகுமாரன் சர்வவல்லவரின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும் மேகங்கள் மேல் வருகிறதையும் நீங்கள் காண்பீர்கள் என்றார். பிரதான ஆசாரியன் இதை கேட்டது தன் வஸ்திரங்களை கிழித்துக்கொண்டு, இனி சாட்சிகள் என்னத்திற்கு? தேவதூஷனத்தை கேடீர்களே. உங்களுக்கு என்னமாய் தோன்றுகிறது என்றான்.” (மாற்கு 14:62-64)

இப்ப கேள்வி என்னன்னா, இவ, எதற்கான தன் வஸ்திரங்களை கிழிக்க வேண்டும்? சரி, அவன் தன் வஸ்திரங்களை கிழித்ததற்கு காரணம் இயேசு சொன்ன விஷயம் சாதாரணமானதல்ல ஒருத்தர் அப்படியே ஆலயத்திற்கு நுழைந்து மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் போக முடியாது, பிரதான ஆசாரியன் மட்டுமே வருடத்திற்கு ஒருமுறை மட்டும் போகமுடியும் – அது பயங்கரமானது, நிபந்தனைகளுக்குட்பட்ட பகுதி, ஏன்னா அது தேவனுடைய பிரசன்னத்தை அடையாளப்படுத்தும் பகுதி. இவர் சொல்றாரு, இல்ல, தேவன் என்னை அவருடைய வலது பக்கத்தில் உட்கார்ந்து பிரபஞ்சத்தி நியாயந்தீர்க்க

வைப்பார், மேகங்கள் மீது அமருவேன், ஆளுகை செய்வேன் என்கிறார். இப்ப, யூதமார்கத்தில், இப்ப ஒரு நிமிடம் உங்க யார்மழ்க் மற்றும் கிப்பாட்டை போட்டுக்கோங்க, யூதமார்கத்தில், நீங்க தேவாலயங்களுக்கு போகும் ஒவ்வொருமுறையும், ஆராதனை நடக்கிற ஒவ்வொரு முறையும், நீங்க அங்க ஷேம்மாவை வாசிக்க வேண்டும் – இதோ, இஸ்ரவேலே, உன் தேவனாகிய கர்த்தர் ஒருவரே. அவருடைய மகிமையை ஒருவரும் பகிர்ந்துகொள்ள முடியாது. இப்ப இயேசு தேவனுடைய மகிமையையும் பிரசன்னத்தையும் தன்னால் பகிர்ந்துகொள்ள முடியும் என்று சொல்லும்போது, இது பெருமையின் கூற்றாக இருக்கிறது ஒரே தேவன் தான் என்று சொல்கிற யூத எண்ணங்களை காயப்படுத்துவதாக இருக்கிறது.

இங்க ஒரு பெரிய பாலம் உண்டாகிறது. இறையியல் ரீதியான பெரிய பிளவு இது பெருமை என்பதிலிருந்து தேவதூஷனமாக மாறிவிட்டது. இயேசு சொன்னது சரியா இருக்கணும் இல்ல இயேசு சொன்னது தவறு. அவர் என்ன சொல்கிறார் என்றால், இதை நீங்கள் காண்பீர்கள் என்று சொல்லும்போது, என்ன சொல்கிறாரென்றால், “சில நாட்களில் என்னுடைய கல்லறை காலியாகும், அப்போது நா எங்க போயிருப்பேன் என்பதை நீங்கள் அறிந்துகொள்வது மட்டுமின்றி, தேவன் எனக்காக நியமித்ததையும் அறிந்துகொள்வீர்கள் என்கிறார்.” இயேசு தம்மை குறித்து கூறுகிற ஒரு வல்லமையான சாட்சியாக இது அமைகிறது.

இதை நேரடியாக அவர் சொல்லவில்லை என்பதை நாம கவனிக்க வேண்டும். அதாவது, “நா தேவனுடைய குமாரன். எனக்கு அது தெரியும்.” இல்ல, அவர் தான் செய்வதையும் தன் மூலமாக தேவன் செய்ய இருப்பதையும் மறைமுகமாக அறிவிக்கிரவராக இருந்தார்.
**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இது ஒரு அர்த்தத்தை தருகிறது ஏன்னா தேவனுடைய நாமத்தை உச்சரிக்க முடியலைன்னா, உண்மையில், சமூகத்தினருக்கு முன்னால இந்த மாதிரியான வார்த்தைகளை நிச்சயமா சொல்லவே முடியாது.

**Dr. டேரல் பாக்:** ஆமா. ஜனங்கள் எப்படி யோசிக்க போறாங்க நீங்க எப்படி கண்ணாடி கூரையை உடைக்கப்போகிறீர்கள் என்ன நடக்க போகிறது என்பதில் அதிக ஜாக்கிரதை உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** மேலும் தானியே தீர்க்கதரிசி கூறுகிறார், தானியேல் ஏழாம் அதிகாரம், அதில் அவர் என்ன சொல்லுகிறார்?

**Dr. டேரல் பாக்:** சரி, மனுஷ குமாரன் என்ற பெயர் பல காரியங்களை தன்னில் அடக்கி கொண்டிருக்கும் ஒரு அருமையான நாமமாகும். அது என்ன செய்கிறது, மனுஷகுமாரன் என்பது மனுகுலத்தை குறிக்கிற வார்த்தையாக இருக்கிறது. ஆனா இது ஒரு குறிப்பிட்ட மனுக்குலம். இந்த நபர் மேகங்கள் மேல் வருகிறவர் ஒருவர். இப்ப, பழைய ஏற்பாட்டில், மேகங்கள் மீது வருகிறவர் என்றால், சரியா, அது தேவனாக இருக்கணும், இல்ல பழைய ஏற்பாட்டில் தேவனுடைய செயலாக இருக்கணும். அப்படிதான் அதை விளக்கியிருக்கிறார்கள். சால்டரில் அது பாகாலின் தன்மையை குறிக்கிறது. இன்னொரு பகுதியில் தேவன் செய்கிற காரியத்திற்கு ஒப்பாக இருக்கிறது. அதனால இது தெய்வத்துவத்தை குறிப்பதாக இருக்கிறது. இப்ப மனிதன் தெய்வத்துவத்திற்கு

ஏற்றவைகளை செய்கிறார், சரியா? ஒரு மனிதன் தெய்வத்துவத்திற்கு ஏற்றவைகளை செய்கிறார். அவர்தான் இயேசு.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இயேசு இதை தமக்கு அப்பியாசப்படுத்தினார்.

**Dr. டேரல் பாக்:** இயேசு அதை தமக்கு அப்பியாசபப்டுத்தினார். இயேசுவே அதை செய்கிறவர் என்றார். அதனாலதான் இப்ப... உயிர்த்தெழுதல் என்பது இயேசு தம்மை குறித்து கூறன அனைத்தையும் தேவன் அன்கீகரித்திருப்பதற்கான அடையாளம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இன்னும் இரண்டு நிமிடங்கள் மீதமிருக்கிறது.

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** இப்ப மாற்கு பதினான்கை பார்க்கலாம். டேரல் சொன்ன விஷயம் சரியா குறிபார்த்து அடிப்பது போல இருந்தது, நம்முடைய போராட்டத்திற்கு இது திறவுகோலாகவும் இருக்கிறது. இதுல இன்னும் சில காரியங்கள சேர்க்க விரும்புகிறேன். இயேசு இப்ப கைபாவிற்கு முன்பாக வருகிறார் சோதனையின் கட்டம் அது. காய்பா, இவர் வருடத்தில் ஒருமுறை பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க கூடியவர் தேவனுடைய பிரசனத்தில் பிரவேசிக்கும் நபர், பூமியில் ஆலயம் என்று இருக்கும்போது இப்படி நடக்கிறது. இப்ப இயேசு தம்மால் தேவனுடைய பிரசனத்திற்குள் போக முடியும் என்று சொல்வது மட்டும் இல்லாமல், மெய்யான தேவாலயத்திற்குள் தான் நுழைய முடியும் என்றும் சொல்லுகிறார், அது தேவன் இருக்கும் இடம், இது ஒரு நல்ல உதாரணமாகும், அல்லது இது, நிழல் என்றும் சொல்லலாம். அதேநேரத்தில் அவர் கைபாவின் பக்கமாக சீட்டை திருப்பி என்ன சொல்கிறார் என்றால், “நீதான் சோதிக்கப்பட போகிறாய். நான் உன்னை நியாயந்தீர்ப்பவராக இருப்பேன் என்கிறார். அவர் நேரடியாக இதை சொல்லியிருக்கலாம், “நாதா ராஜா.” அதுவே போதுமானதாக இருந்திருக்குமே. ஆனா அவர் என்ன செய்கிறார் என்பதை சொல்லுகிறார், “தேவனுடைய சின்காசனம் இருக்கும் இடத்தில் இருப்பேன். அவருடைய இருக்கையில் நான் அமருவேன். நான்தான் உங்கள் நியாயாதிபதி. இது ஒரு அருமையான விஷயம்.

சரி, பதிநான்காம் அதிகாரத்திற்கு பிறகு நடந்தவைகளை பார்க்கும்போது, இது அப்போஸ்தலர் பதிநான்காம் காலம், இங்க பவுலும் பர்ணபாசும் லீஸ்திராவில் பிரசங்கித்துகொண்டு இருக்கிறார்கள். இங்க கிரேக்க மொழியை பேசாத ஜனங்கள் தங்களிடத்தில் இரண்டு கிரேக்க தெய்வங்கள் வந்திருப்பதாக கூறுகின்றனர். பவுல் அதை பற்றி அறிந்துகொள்ளும்போது, அப்போஸ்தலர் 14:14 அவன் செய்கிற முதல் காரியம் தன் வசிதிரங்களை கிழித்தான். அவன் அப்படி செய்ததற்கு அடையாளம் என்னவென்றால், நீங்கள் தேவதூஷணம் சொல்லுகிறீர்கள்.” இப்ப,காய்பா இயேசு தாம் செய்யபோவதை சொன்னதற்காக அப்படி செய்தான். இங்க பவுல் தன்னையும் பர்னபாசையும் லீச்திரா மக்கள் தெய்வங்கள் என்று சொன்னதற்காக அப்படி செய்தான். நிச்சயமாகவே, இயேசு அந்த வார்த்தைகளை சொன்னது ஒரு வேலை அவர் உண்மையாக தேவனாக இல்லாதிருந்தால் அது தேவதூஷனமாக தான் இருந்திருக்கும்.

**Dr. டேரல் பாக்:** பவுல் ஏற்றுகொள்ள மறுக்கிற ஒரு காரியம் ஒரு கருத்தை இயேசு ஏற்றுகொள்ளுகிறவராக இருந்தார் என்றிடலாம். இதிலிருந்து இயேசுவுக்கும் அவருடைய

சீஷர்களுக்கும் இருந்த வித்தியாசம் தெரிகிறது. மேலும் சிலவேளைகளில் இயேசுதுவத்தை பற்றி பேசுகிறவர்கள் ஒரே கருத்தின் அடிப்படையில் நாம் எல்லாரும் தேவனுடைய பிள்ளைகள் என்பதை நமக்கு வெளிப்படுத்தும்படி இயேசு முயன்றார் என்கின்றனர். இல்லை,இல்லை, இல்லை, இல்லை, இல்லை, இல்லை, இல்லை. அப்படி இல்ல. இயேசு தனித்துவமானவர், அவருடைய கூற்றுகளில் அவர் தனித்துவம் கொண்டவர். அவர் நம்மை தேவனுடைய பிள்ளைகளாக தேவனுடைய குமாரர்களாக மாற்றுகிறார், ஆனால் இயேசு தேவனுடைய குமாரன் என்கிற அதே நிலையில் நம்மையும் நிறுத்துவது இல்லை.

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** அது மட்டுமல்ல, வெளிப்படுத்தல் 19:10ல் கவனிக்கும்

பார்த்தால் யோவான் ஒரு தூதனுடைய பிரசனத்தினால் மெய்சிலிர்த்து போய் அவருக்கு முன்பாக சாஷ்டாங்கமாக விழுந்து வணங்குகிறான்., அந்த தூதன் பிரதியுத்திரமாக, “எழுந்துரு, இப்படி செய்யாதே. நானும் உன்னை போல ஒரு ஊழியன்தான் என்றான்.” அப்படின்னா அவங்க மனிதர்கள் கிடையாது, ஆனா தூதர்கள் கூட இயேசு கிறிஸ்துவின் அதே ஸ்தானத்தை உடையவர்கள் அல்ல.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இது அருமையான விஷயம். அதாவது, அது வரலாற்று பதிவுகளில் இருக்கிறது. அதை நீங்கள் சரி பார்க்க வேண்டும். அதை ஒரு மாணவனாக கவனித்தது எனக்கு நினைவிருக்கிறது. நா நினைத்தேன், “இந்த விஷயத்தை நான்தான் கையாளவேண்டும்.”

**Dr. டேரல் பாக்:** அது வியப்பானதுதான், ஆனா பார்க்கின் கருத்துப்படி அவை வியப்பானவைகள் அல்ல, அது நம்பமுடியாததாக இருக்கிறது. அது ஏன் வியப்பானது என்றால் அது தேவனிடம் இருந்து வந்த தனித்தன்மை கொண்ட அதிகாரமும் தேவ முத்திரையும் பெற்ற செய்தியாகும், நம்ப முடியாத ஒன்று என்பதற்கு எதிராக இருக்கிற காரியம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இந்த உண்மைய பற்றி சொல்லுங்க, அதாவது, அந்த நாட்களில் இருந்தவர்களுக்கு இது மிகப்பெரிய விஷயமாக இருந்தது. ஒரு இடறலாக இருக்கிறது. எந்தவிதத்தில் அது ஒரு முட்டுகட்டையாக இருக்கிறது?

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** அதாவது, நம்பிக்கைக்கு இது ஒரு தடைகல்லாக இருக்குமென்று பார்க் கூறுகிறார். உண்மையில் இது நம்பிக்கைக்கான தடைகள்தான். அதனால் தான் பவுல் உபத்திரவப்படுத்தப்பட்டார். அதனால் தான் யூதர்களிடம் இது யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்கு பைதியமாயுமிருக்கிறது என்கிறார். (1 கொரி. 1:23) சுவாரஸ்யமான காரியமாக எனக்கு தோன்றுகிறது என்னவென்றால் கிறிஸ்தவத்தின் ஆதிகால வடிவமைப்பை பார்க்கும்போது, அதாவது புதிய ஏற்பாட்டில் இருக்கிறவை, அதிலுள்ள செய்திகள் எல்லாம் யூதருக்கும் கிரேக்கருக்கும் ரோமர்களுக்கும் ஏற்ப்புடையதாக காணப்படவில்லை. இரண்டாவது நூற்றாண்டை பார்க்கும்போது அதில் விடுபட்ட சுவிசேஷங்கள் வருகிறது, இங்கு நியோ பிலாடோனிக் உலக கண்ணோட்டத்தோடு ஒத்துபோகிற ஒரு விஷயம் உண்டாயிருக்கிறது. இருந்தாலும், இந்த கண்ணோட்டம் வெற்றிபெறவில்லை, ஏன்னா இந்த கண்ணோட்டம் வாழ்க்கையை

மாற்றுவதாக இல்லை, ஏன்னா இந்த கண்ணோட்டம் இயேசுவிடம் நம்மை நடத்தி செல்வதும் இல்லை அப்போஸ்தலர்கள் சீஷர்கள் இடத்திற்கும் நடத்தி செல்வதில்லை.

**Dr. டேரல் பாக்:** இயேசுவினுடைய செய்தி அரசியல் ரீதியாக தவறாக இருந்தாலும், பிரபஞ்ச ரீதியாக சரியானது.

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** நிச்சயமா. அருமையான விஷயம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். இந்த உரையாடலை நாம் அடுத்த வாரம் தொடர் இருக்கிறோம். அடுத்த படியை குறித்து நாம் பேசிட இருக்கிறோம். எப்படி ஆதி திருச்சபையினரால் இந்த புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் தேர்வு செய்யப்பட்டது என்று சர்ச்சை அதிகமாக இருக்கிறது. இதெல்லாம் அதிகாரப்பூர்வமானது என்று எப்போது அறிந்துகொண்டனர்? மற்றவை ஏன் இந்த கேனானில் சேர்க்கபப்டவில்லை, ஏன் அதை உடனடியாக கண்டறியவில்லை? இந்த மாதிரியான சில கேள்விகளைத்தான் சமுதாயம் இன்றைக்கு கேட்டுகொண்டிருக்கிறார்கள். அந்த உரையாடலை நீங்க விட்டுவிட கூடாது என்று நினைக்கிறேன். நீங்கள் தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.


எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.